**ஜனவரி – 27**

# TNPSC துளிகள்

- புதுச்சேரியில் பிறந்த தவில் வித்துவான் P. தட்சணாமூர்த்தியும், 2025 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதுகளைப் பெறுபவர்களில் ஒருவர் ஆவார்.
- 1939 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்காக வேண்டி தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த நடராஜன் மற்றும் தாளமுத்து ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவு சின்னத்தினை சென்னையில் மூலக்கொத்தளம் என்னுமிடத்தில் தமிழக முதல்வர் திறந்து வைத்து உள்ளார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ஆனது, குஜராத்தின் ஜாம்நகரில் உலகின் மிகப் பெரியத் தரவு மையத்தினைக் கட்டமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவில் மத்திய வங்கி எண்ணிம நாணயத்தினை (CBDC) உருவாக்குவதையும் வெளியிடுவதையும் தடை செய்யும் ஒரு செயலாக்க உத்தரவில் அமெரிக்க அதிபர் கையெழுத்திட்டுள்ளார்.
- மத்தியப் பிரதேச அமைச்சரவையானது, அந்த மாநிலத்தில் உள்ள 17 சமயச் சிறப்பு பெற்ற நகரங்களில் மதுபானத்திற்குத் தடை விதிக்க முடிவு செய்துள்ளது.
- அமெரிக்காவில் பிறப்புரிமை சார்ந்த தன்னிச்சையான குடியுரிமையினை ரத்து செய்யும் செயலாக்க உத்தரவினை "அரசியலமைப்புக்கு விரோதமானது" என்று கூறி அதனை செயல்படுத்துவதை நிறுத்தி வைக்கச் செய்யுமாறு அதன் கூட்டாட்சி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
- பஞ்சாப் கிரிக்கெட் வீரர் அர்ஷ்தீப் சிங், சர்வதேச கிரிக்கெட் சபையின் (ICC) 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்தக் கிரிக்கெட் வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் இரண்டு முறை நடப்பு சாம்பியன் பட்டம் பெற்ற பெலாரசின் அரினா சபலென்காவை வீழ்த்தி அமெரிக்காவின் மேடிசன் கீஸ் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினை வென்று உள்ளார்.
- இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI) ஆனது, தற்போது உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் அதன் ஆறாவது பிராந்திய அலுவலகத்தினை நிறுவ உள்ளது.
  - தற்போது இது கௌஹாத்தி (அசாம்), பாட்னா (பீகார்), கொச்சி (கேரளா), புவனேஸ்வர் (ஒடிசா) மற்றும் கொல்கத்தா (மேற்கு வங்காளம்) ஆகிய இடங்களில் ஐந்து பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## பத்ம விருது பெற்ற தமிழர்கள்

- இந்த ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த பதின்மூன்று பேரும், புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவரும் பத்ம விருதுகளைப் பெற்றுள்ளனர்.
- ஏற்கனவே பத்மஸ்ரீ விருது பெற்றவருமான குப்புசாமி செட்டி நல்லி சில்க்ஸ் எனப்படும் புகழ் பெற்ற பட்டுப் புடவைகள் தயாரிப்பு நிறுவனத்தினைக் கொண்டுள்ளார்.

- டெஸ்ட் போட்டிகளில் 537 விக்கெட்டுகளை வீழ்த்தி சமீபத்தில் ஓய்வு பெற்ற அஸ்வின், விளையாட்டுத் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக வேண்டி பத்மஸ்ரீ விருதைப் பெற்றுள்ளார்.

| Name | Field | Aaward |
|---|---|---|
| Nalli Kuppuswami Chetti | Trade and Industry | Padma Bhushan |
| S Ajith Kumar | Art | Padma Bhushan |
| Shobana Chandrakumar | Art | Padma Bhushan |
| Guruvayur Dorai | Art | Padma Shri |
| K. Damodaran | Others-Culinary | Padma Shri |
| Lakshmipathy Ramasubbaiyer | Literature and Education-Journalism | Padma Shri |
| M D Srinivas | Science and Engineering | Padma Shri |
| Purisai Kannappa Sambandan | Art | Padma Shri |
| R Ashwin | Sports | Padma Shri |
| R G Chandramogan | Trade and Industry | Padma Shri |
| Radhakrishnan Devasenapathy | Art | Padma Shri |
| Seeni Viswanathan | Literature and Education | Padma Shri |
| Velu Aasaan | Art | Padma Shri |


## சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ExTeM மையம்




- சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ExTeM மையம் ஆனது, விண்வெளியில் உற்பத்தி செயல்முறைகளை மேற்கொள்வதற்கான புதியத் தொழில் நுட்பங்களில் பணியாற்றி வருகிறது.
- இந்த மையம் விண்வெளியில் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கட்டிடங்கள், கனமற்ற உலோக நுரைமம் மற்றும் ஒளியிழைகள் போன்ற தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

- இந்த மையம் ஆனது தண்ணீர் இல்லாமல் கற்காரை கட்டுமானம் போன்ற மாறுதல் மிக்க செயல்முறைகளையும் உருவாக்கி வருகிறது.
- ExTeM (புவிக்கு அப்பாலான பகுதியில் உற்பத்தி செயல்முறை) பற்றிய இந்த ஆராய்ச்சி இந்தியாவின் ககன்யான் திட்டம் மற்றும் அதன் எதிர்கால நோக்கிலான விண்வெளி நிலையம் ஆகியவற்றினை வலுப்படுத்தும்.
- இதன் நுண் ஈர்ப்பு விசை சூழல் உருவாக்க அமைப்பு ஆனது உலகின் நான்காவது பெரிய செயல்பாட்டுக் கோபுரம் ஆகும்.

## உள்ளாட்சித் தேர்தல்களில் EVM இயந்திரங்கள்




- தமிழ்நாட்டில் உள்ள 28 மாவட்டங்களில் உள்ள வாக்காளர்கள் இந்த தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் (EVM) பயன்படுத்தி மாவட்ட, ஒன்றிய மற்றும் கிராம மட்டங்களில் தங்கள் மன்ற/வார்டு உறுப்பினர்களையும், அவர்களின் பஞ்சாயத்துத் தலைவர்களையும் தேர்ந்தெடுக்க இயலும்.
- வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பதவிக் காலம் ஆனது 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முடிவடைகிறது.
- தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் (TNSEC) ஆனது, இங்கு கிராமப்புற உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த மாவட்டங்களில் படிப்படியாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தச் செய்வதற்கான சோதனைத் திட்டம் ஆனது 2019 ஆம் ஆண்டில் மேல்புறம் பஞ்சாயத்து ஒன்றியத்தில் நடத்தப்பட்டது.


## தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் 2024

- முந்தைய ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் உயிரிழப்பு எண்ணிக்கையானது 273 என்ற அளவு குறைந்துள்ளதால், சாலை விபத்து மூலமான உயிரிழப்புகள் மிக கணிசமாகக் குறைந்துள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 17,526 சாலை விபத்துகளில் 18,347 பேர் உயரிழந்த நிலையில், கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை முறையே 18,074 மற்றும் 17,282 ஆகக் குறைந்துள்ளது.

- மோட்டார் வாகன விதிகளை மீறியதற்காக 80,558 ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன.
- படுகாயமடைந்த 12,629 பேரை நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் ஆனது, சாலை விபத்து நடந்த 1 மணி நேரத்திற்குள், மருத்துவமனையில் சேர்த்தன.




## இதயம் காப்போம் - முதல் மதிப்பீடு





- 2023 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியன்று தமிழக மாநில அரசு ஆனது, 'இதயம் காப்போம் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியது.
- இருதய நோயால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக என்று ஆரம்ப சுகாதார மையங்கள்/துணை சுகாதார நிலையங்களில் தீவிர இருதயப் பிரச்சினைகளுக்கான விரைவு உள்ளீட்டு மருந்துகளை (ஆஸ்பிரின், குளோபிடோக்ரெல் மற்றும் அட்டோர் வாஸ்டாடின்) வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இங்கு ஆய்வு செய்யப்பட்ட மக்கள்தொகையின் தரவுகள் ஆனது, பெரும்பாலான நோயாளிகள் ஆண்கள் (4,248 பேர்) என்பதைக் காட்டுகிறது.
- ஆய்வுத் தரவில், சுமார் பாதி எண்ணிக்கையிலான நோயாளிகள் சுமார் 45 முதல் 60 வயதுடையவர்கள் (2,137 ஆண்கள் மற்றும் 1,148 பெண்கள்) தெரிய வந்துள்ளது.
- அறிகுறிகள் வாரியாக, சுமார் 76.5% (4,964) பேர் ஆரம்ப சுகாதார மையங்களில் நெஞ்சு வலிக்கு சிகிச்சை பெற வந்துள்ளனர்.

- இதைத் தொடர்ந்து 10.9% பேருக்கு படபடப்பும், 6.6% பேருக்கு கழுத்து / தாடை /கை / தோள்பட்டை வரையிலும் வலி பரவியது.
- 97.7% நோயாளிகள் (6,346) உயிர் பெற்று நலம் பெற்றனர், அதே நேரத்தில் 2.2% (143) பேர் உயிரிழந்தனர் மற்றும் 0.1% (4) பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்தனர்.

# தேசியச் செய்திகள்

## சமையல் எண்ணெய் நுகர்வு குறித்த முதல் கணக்கெடுப்பு




- இந்தியாவில் சமையல் எண்ணெய் நுகர்வு முறைகளை மதிப்பிடுவதற்கான முதல் கணக்கெடுப்பினை மத்திய வேளாண் அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- சமையல் எண்ணெய்கள்-எண்ணெய் வித்துக்கள் (NMEO-எண்ணெய் வித்துக்கள்) தொடர்பான புதியத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவானத்து உலகின் மிகப்பெரிய சமையல் எண்ணெய் நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளர் நாடாக இருந்தாலும், நுகர்வு முறைகள் குறித்த சமீபத்திய தரவுகள் எதுவும் இல்லை.
- இந்தியாவில் தனிநபர் வருடாந்திர சமையல் எண்ணெய் நுகர்வு ஆனது 20 கிலோ கிராமிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) பரிந்துரைத்த 12 கிலோகிராம் மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) நிர்ணயிக்கப்பட்ட 13 கிலோகிராம் என்ற வரம்புகளை மீறும் வகையில் உள்ளது.

## இந்தியர்களின் நாடுகடத்தல்கள் 2025


- அமெரிக்க நாட்டில் சட்ட விரோதமாக வசிக்கும் சுமார் 18,000 புலம்பெயர்ந்தோரை இந்திய அரசாங்கம் அடையாளம் கண்டு, அவர்களை நாடு திரும்பச் செய்வதற்கு என திட்டமிட்டு உள்ளது.
- அமெரிக்காவில் சுமார் 725,000 ஆவணமற்ற புலம்பெயர்ந்த இந்தியர்கள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ள நிலையில் இது மெக்சிகோ மற்றும் எல் சால்வடார் ஆகிய நாட்டுப் புலம் பெயர்ந்த குழுவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய குழுவாக உள்ளது.

- 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனைத்து H-1B நுழைவு இசைவுச் சீட்டுகளில் சுமார் 75% பேர் இந்தியர்களாக இருந்தனர்.
- குடியேற்றச் சட்டத்தினை மீறியதற்காக அமெரிக்காவிலிருந்து குடியுரிமை பெறாத ஒருவரை வெளியேற்றும் செயல்முறையே நாடு கடத்தல் ஆகும்.
- குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற, பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்; அல்லது அவர்களின் நுழைவு இசைவுச் சீட்டு விதிமுறைகளை அங்கு மீறும் குடிமக்கள் அல்லாதவர்களை அமெரிக்கா தடுப்புக் காவலில் வைத்து நாடு கடத்தலாம்.
- விசாரணை அல்லது நாடு கடத்தலுக்கு மிக முன்னதாக ஒரு வெளிநாட்டினர் தடுப்புக் காவல் மையத்தில் காவலில் வைக்கப்படலாம்.
- 2019 ஆம் ஆண்டில், சுமார் 1,616 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டனர் என்ற நிலையில் இது 2020 ஆம் ஆண்டில் 2,312 ஆக அதிகரித்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## ஸ்டார்கார்ட் நோய்




- ஸ்டார்கார்ட் நோயைக் குணப்படுத்தச் செய்வதற்கு என்று மரபணுக்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை செயல் விளக்கிக் காட்டுவதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- ஸ்டார்கார்ட் நோய் என்பது குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரிடையே படிப்படியான பார்வை இழப்புக்கு வழி வகுக்கும் ஒரு மரபணு வழி பரவும்/ பரம்பரை வழி நோயாகும்.

- இது பொதுவாக இரு கண்களையும் பாதிக்கிறது.
- பொதுவாக ஸ்டார்கார்ட் நோய் என்பது ஸ்டார்கார்ட் ஒளிக்குவியச் சிதைவு நோய் என்றும் அழைக்கப் படுகிறது என்பதோடு இது பொதுவாக ABCA4 என்ற மரபணுவில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகிறது.
- இந்த மரபணு ஆனது நமது உடல் A என்ற வைட்டமினை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப் பாதிக்கிறது.
- இந்தியாவில், இந்த நோயின் பரவல் ஆனது 8000 முதல் 10000 பேரில் ஒருவருக்கு என்ற வீதத்தில் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் பிரேசில் காட்டுத்தீ





- இத்தாலி அல்லது இந்தியாவில் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் அளவை ஒத்த 30.87 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமான வனப்பகுதியானது இங்கு காட்டுத் தீ மூலம் தீக்கிரையானது.
- 17.24 மில்லியன் ஹெக்டேர் அழிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு காட்டுத் தீயில் எரிந்த சம்பவத்திற்குப் பிறகு 79 சதவீதம் அதிகரிப்பு பதிவானது, அதாவது 13.63 மில்லியன் ஹெக்டேர் பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, 18.08 மில்லியன் ஹெக்டேர் எரிந்து நாசமான 2019 ஆம் ஆண்டு காட்டுத்தீ பாதிப்பிற்குப் பிறகு பதிவான மிக அதிகப் பரப்பிலான பாதிப்பு ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் போது, ஒரே மாதத்தில் சுமார் 10.63 மில்லியன் ஹெக்டேர் தீயில் அழிந்தன.
- 17.9 மில்லியன் ஹெக்டேர்கள் பாதிக்கப்பட்டதுடன் அமசோனியா மிக மோசமாகப்

பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து சுமார் 9.7 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் செராடோவும், சுமார் 1.9 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் பன்டனலும், 1 மில்லியன் ஹெக்டேர் பாதிப்புடன் மத்த மட்டா அட்லாண்டிகா பகுதியும் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## உத்தரப் பிரதேச ஸ்தாபன தினம் 2025




- 1902 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் ஆட்சியின் போது இது ஆக்ரா மற்றும் அவாத் ஐக்கிய மாகாணங்களாக நிறுவப்பட்டன.
- சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த ஐக்கிய மாகாணங்கள் 1947 ஆம் ஆண்டில் ஒரு நிர்வாக அலகாக மாற்றப் பட்டதோடு 1949 ஆம் ஆண்டில் தெஹ்ரி கர்வால் மற்றும் ராம்பூர் ஆகிய சுதேச மாநிலங்கள் அதில் இணைக்கப்பட்டன.
- இறுதியாக, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று, இந்த மாநிலமானது உத்தரப் பிரதேசம் என மறுபெயரிடப்பட்டது.
- ஆனால் உத்தரப் பிரதேச தினமானது முதன்முதலில் 1989 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டில், இந்த மாநிலத்தின் மலைப் பகுதிகள் பிரிக்கப்பட்டு, முதன்முதலில் உத்தராஞ்சல் என்று பெயரிடப்பட்டு, பின்னர் உத்தரக்காண்ட் என மறுபெயரிடப்பட்ட ஒரு புதிய மாநிலம் உருவாக்கப்பட்டது.

## இமாச்சலப் பிரதேச மாநில தினம் 2025


- இமாச்சலப் பிரதேச தலைமை ஆணையர் மாகாணம் ஆனது 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயல் படுத்தப்பட்டதன் மூலம் இது ஒரு C பிரிவு மாநிலமாக மாற்றப்பட்டது.

- இமாச்சலப் பிரதேசம் ஆனது, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் ஆனது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று, இந்திரா காந்தி அரசு ஆனது இமாச்சலப் பிரதேசத்திற்கு முழு மாநில அந்தஸ்தினை வழங்கியது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பத்ம விருதுகள் 2025





- நாட்டின் மிக உயரியக் குடிமை விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் ஆனது, பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ என மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றன.
- கலை, சமூகப் பணி, பொது விவகாரங்கள், அறிவியல் மற்றும் பொறியியல், வர்த்தகம் மற்றும் தொழில்துறை, மருத்துவம், இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, ஆட்சிப் பணி போன்ற பல்வேறு துறைகள்/ செயல்பாட்டுத் துறைகளில் வழங்கப்படுகின்றன.
- மகத்தான மற்றும் சிறப்பான சேவைக்காக பத்ம விபூஷண் வழங்கப் படுகிறது.
- சிறப்பான பொதுச் சேவைக்காக பத்ம பூஷண் விருதும், எந்தவொரு துறையிலுமான

சிறப்பான சேவைக்காக 'பத்ம ஸ்ரீ' விருதும் வழங்கப்படுகிறது.

- ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று இந்த விருதுகள் அறிவிக்கப்படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டில், 1 இரட்டை விருது (இரட்டை விருதில், அந்த விருது ஒன்றாகக் கணக்கிடப் படும்) உட்பட 139 பத்ம விருதுகளை வழங்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் 7 பத்ம விபூஷண், 19 பத்ம பூஷண் மற்றும் 113 பத்மஸ்ரீ விருதுகள் அடங்கும்.
- விருது பெற்றவர்களில் 23 பேர் பெண்கள் ஆவர் என்பதோடு 10 பேர் வெளிநாட்டினர்/ வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) / இந்திய வம்சாவளியினர் (PIO) / வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட இந்தியர்கள் (OCI) என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்ற நிலையில் 13 பேருக்கு மறைவுக்குப் பின்னதாக இந்த வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேர் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவர் இந்த ஆண்டு பத்ம விருதுகளைப் பெற்றுள்ளனர்.

## சர்வதேச சூரியசக்தி மாநாடு 2025

- இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஆனது, 'சூரியன், விண்வெளி சார்ந்த வானிலை மற்றும் சூரிய-நட்சத்திர மண்டல இணைப்புகள்' குறித்த மாநாட்டினைப் பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்துள்ளது.
- கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய வானியலின் ஓர் பெரும் அடித்தளமான இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் கொடைக்கானல் சூரிய ஆய்வகம் (KSO) ஆனது 1899 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25

- இத்தினமானது 1950 ஆம் ஆண்டில் இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட நாளை நினைவு கூர்கிறது.
- இது வாக்காளரின் பெரும் முக்கியத்துவத்தினை அடிக்கோடிட்டுக் காட்டுவதையும், குடிமக்களிடையே தேர்தல் விழிப்புணர்வை நன்கு ஏற்படுத்துவதையும், ஜனநாயகச்

செயல்பாட்டில் அவர்களின் தீவிரமான பங்கேற்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "Nothing Like Voting, I Vote for Sure" என்பதாகும்.




## தேசியச் சுற்றுலா தினம் - ஜனவரி 25




- இந்தியாவின் இயற்கை அழகை அங்கீகரிப்பதையும், இந்தியப் பொருளாதாரத்திற்கு சுற்றுலாவின் பெரும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதையும் இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசானது, தேசியப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 1948 ஆம் ஆண்டில் ஒரு தனி சுற்றுலாத் துறையை உருவாக்கியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Tourism for Inclusive Growth" என்பதாகும்.

- ஐக்கிய நாடுகளின் உலகச் சுற்றுலா அமைப்பு (UNWTO) ஆனது, செப்டம்பர் 27 ஆம் தேதியன்று உலக சுற்றுலா தினத்தைக் கொண்டாடுகிறது.

## தமிழ் மொழி தியாகிகள் தினம் - ஜனவரி 25

- தமிழ்நாடு அரசானது 2025 ஆம் ஆண்டு முதல் இந்த நாளினை ‘தமிழ் மொழி தியாகிகள் நாள்’ ஆக அனுசரிக்க உள்ளது.
- 1939 ஆம் ஆண்டில் இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான ஒரு போராட்டத்தில் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்களை இத்தினம் நினைவுகூர்கிறது.
- 1938 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கு இந்தி மொழி கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது 1938 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் தேதியன்று ஒரு மொழி இயக்கம் உருவாக வழி வகுத்தது.
- இந்த இயக்கத்தின் போது, தஞ்சாவூரைச் சேர்ந்த தாளமுத்து மற்றும் பெரம்பூரைச் சேர்ந்த நடராசன் ஆகியோர் கைது செய்யப் பட்டு இறுதியில் காலமானார்கள்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★